தலைப்பு 013 – மனித உரிமைகள் ஆணைக்குழு - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 013 - மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 13 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மனித உரிமைகள் ஆனைக்குழுவின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் மனித உரிமைகள் ஆனைக்குழுவினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை மனித உரிமைகள் ஆனைக்குழுவினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மனித உரிமைகள் ஆனைக்குழுவினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மனித உரிமைகள் ஆனைக்குழுவின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 ஆதனங்கள் பொறிகள் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நிதி அல்லாச் சொத்துக்கள், நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 14,905,920 ஆக காணப்பட்ட போதிலும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 13,349,113 ஆகியமையினால் ரூபா 1,556,807 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றதுடன் இந்த வேறுபாட்டிற்கு காரணம் பிரதேச செயலகங்களின் கொள்வனவு நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட்டிராமை மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட சில பொருட்கள் சொத்துக்கள் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட்டிராமை ஆவதுடன் அது சீர் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.	நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டு பேணிச் செல்லல் வேண்டும்.
(ஆ)	2023 ஆம் ஆண்டின் பொருள் சுற்றாய்வு அறிக்கையின் பிரகாரம் 83 பொருட்கள் உறுப்படிகள் கைதவிர்ப்பு செய்யப்பட்டிருந்த போதிலும் அப் பொருட்களின் கிரயம் இனங்காணப்பட்டு நிதி அல்லாச் சொத்துக்களிலிருந்து	இந்த பொருட்களின் கிரயம் இனங்காணப்படல் கடினமாகியமை மற்றும் அவ் உறுப்படிகள் CIGAS ஊடாக இனங்காணப்படல் கடினமானதென்பதனால் அது நிதிச் சொத்துக்களிலிருந்து அகற்றப்பட்டிராததுடன் அது சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும்	கைதவிர்ப்பு செய்யப்பட்ட சொத்துக்களின் கிரயம் நிதி அல்லாச் சொத்துக்களிலிருந்து அகற்றப்படல் வேண்டும்.

	அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தெரிவிக்கப்பட்டுள்ளது.	
(இ)	மீளாய்வாண்டினுள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வாகனங்கள் தொடர்பான தகவல்கள் பிரகாரம் மற்றும் BOS Report இன் பிரகாரம் 02 துவிச்சக்கர வண்டிகளின் கிரயம் அல்லது மதீப்பீட்டு பெறுமதி கணக்கிடப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் இரண்டு துவிச்சக்கர வண்டிகளையும் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டு CIGAS கணினி அமைப்பினுள் உள்ளீடு செய்யப்படும் என குறிப்பிடப்பட்டள்ளது.	அனைத்து சொத்துக்களும் இனங்காணப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும்.
(ஈ)	2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய 06/2024 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிக்காட்டியின் 8.2 பந்தியின் பிரகாரம் 2004 ஆம் ஆண்டுக்கு முன்னர் சொத்துக்கள், மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது.	கணக்கு வழிக்காட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	பெறுமதி ரூபா 701,786 ஆன நூலக புத்தகங்கள் நிதி அல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பல ஆண்டுகளாக இந்த நூலக புத்தகங்கள் வருடாந்த பொருள் சுற்றாய்வுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றதுடன் நூலக புத்தகங்கள் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கும் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் பொருள் சுற்றாய்வுக்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது.	நூலக புத்தகங்கள் பொருன் சுற்றாய்வில் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும்.

1.6.2 கட்டுநிதி மீதிகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ACA3 மாதிரியில் கட்டுநிதி தீர்ப்பனவாக ரூபா 375,167,059 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் திரண்ட பரீட்சை மீதியில் அப் பெறுமதி ரூபா 380,489,153 ஆகியமையினால் ரூபா 5,322,094 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	திணைக்கள திரண்ட பரீட்சை மீதியின் பிரகாரம் செலவீனம் ஊடாக கட்டுநிதி தீர்ப்பனவு ரூபா 375,167,059 ஆவதுடன், பணம் ஊடாக கட்டுநிதி தீர்ப்பனவு செய்தல் ரூபா 5,322,094 ஆக மற்றும் கூட்டுத்தொகை ரூபா 380,489,153 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.	நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
கருத்திட்டங்களின் செலவீனங்கள் ஏற்பதற்காக பேணிச் செல்லப்பட்டிருந்த தற்காலிக முற்பண பதிவேடு முறையாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.	அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அதை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது.	முற்பண பதிவேடு முறையாக நாளதுவரையாக்கப் பட்டு பேணிச் செல்லப்படல் வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன,

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஊடாக திருத்தப்பட்ட நி.பி 371(05) இற்கு இணங்காது உப கட்டுநிதி மீண்டும் தீர்ப்பனவு செய்ய வேண்டிய காலம் 11 தொடக்கம் 170 நாட்கள் வரையான காலப்பகுதியினை கொண்ட 74 சந்தர்பங்கள் காணப்பட்டன.	அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் மீண்டும் அவ்வாறான தாமதம் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறு தொடர்புடைய உத்தியோகத்தர்கள் மற்றும் பிரிவுகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ) நி.பி 371 (2) (ஆ) பிரகாரம் விசேட பணியொன்றிற்காக பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு மட்டும் ஒரு சந்தர்ப்பத்தின் போது ரூபா 100,000 ஆக வரையில் உப கட்டுநிதி பெற்றுக் கொடுப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு முடியுமான போதிலும் அவ் எல்லையை மிகைத்து தற்காலிக உப கட்டுநிதியொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் மீண்டும் ஏற்படாதிருக்க குறித்துக் கொள்ளப்பட்டதென குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.2 செலவின முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
அரசாங்க நிதி பிரமாணம் 50 பிரகாரம் செலவின மதிப்பீடு உரிய வண்ணம் தயாரிக்கப்பட்டிராமையின் காரணத்தினால் 14 நடைமுறை செலவின விடயங்கள் மற்றும் 02 மூலதன செலவின விடயங்களின் சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டில் 13 சதவீதம் தொடக்கம் 73 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.	இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 1502 மற்றும் 1505 செலவின விடயங்களின் செலவினம் எதிர்பார்க்கப்பட்ட வண்ணம் ஏற்படாமை மற்றும் தேசிய வரவு செலவு சுற்றறிக்கையின் பிரகாரம் செலவினம் கட்டுப்படுத்தப்பட்டமையினால் ஏனைய செலவின விடயங்களின் செலவினம் மட்டுப்படுத்தப்பட்டதென குறிப்பிடப்பட்டுள்ளது.	நி.பி 50 பிரகாரம் சிக்கனம் மற்றும் வினைத்திறன் தொடர்பாக உரிய கவனத்துடன் செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

3.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2025 ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த மீளாய்வாண்டிற்குரிய கூட்டுத்தொகை ரூபா 3,107,679 ஆன செலவீனம் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களினுள் பொறுப்புக்களுக்கு உட்படும் கடப்பாடு கூற்றில் (பிண்ணினைப்பு iv) காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2025 சனவரி 31 இற்கு முன்னர் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் CIGAS வெப் அமைப்பிற்கு உள்ளடக்கப்பட வேண்டியமையினால் அதன் பிரகாரம் சனவரி 25 ஆம் திகதியாகையில் காணப்பட்ட பொறுப்புக்கள் மட்டும் CIGAS அமைப்பிற்கு உள்ளடக்கப்படடுமென குறிப்பிடப்பட்டுள்ளது.	மீளாய்வாண்டிற்குரிய அனைத்து பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும்.
(ஆ) 2025 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2025 மார்ச் 31 ஆம் திகதி வரையில் முன்கூட்டியே செலுத்தப்பட்ட கட்டிடங்கள் வாடகை ரூபா 255,000 மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்வில்லை.	அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.	ஆண்டிற்குரிய பொறுப்புக்கள் மட்டும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணங்காமை	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கருத்துரை	பரிந்துரை
(அ) 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு	குறிக்கப்பட்ட சுற்றறிக்கை பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆனைக்குழுவிற்கு சொந்தமான 39 வாகனங்களுக்கான எரிபொருள் பயன்பாடு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	மேற்படி சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் எதிர்காலத்தில் எரிபொருள் பயன்பாடு பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ) 2017 யூன் 28 திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி	குறிக்கப்பட்ட சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கொள்வனவு செய்யப்படும் மற்றும் கைதவிர்ப்பு செய்யப்படும் சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் மேற்படி கொம்ப்ரோலர் பணிப்பாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 ஆம் இலக்க அரச கணக்ககள் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை	சரியான மாதிரியில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது.	தொடர்புடைய சுற்றறிக்கை மற்றும் தொடர்புடைய மாதிரியின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

(ஆ)	ஆனைக்குழுவிற்கு பெறப்பட்ட புகார்கள் மற்றும் அவற்றின் தீர்வும்		
(i)	2024 சனவரி 01 இல் விசாரிப்பதற்காக 8,778 புகார்கள் மற்றும் மீளாய்வாண்டினுள் பெறப்பட்ட புகார்களின் எண்ணிக்கை 9,844 ஆகியமையினால் புகார்களின் கூட்டுத்தொகை 18,622 ஆக காணப்பட்டன. ஆண்டினுள் அப் புகார்களில் 8,135 புகார்கள் அதாவது 44 சதவீதம் தீர்வு வழங்கப்பட்டிருந்தது. ஆவ்வாறு முடிவுறுத்தப்பட்டிருந்த 8,135 புகார்களில் 1,599 ஆனவை அடிப்படை உரிமைகள் மீறப்படாமையினாலும், 2,458 புகார்கள் ஆர்வமின்மையினாலும், 927 புகார்கள் விடயப் பரப்பிற்கு தொடர்பற்றமையினால் 4,984 புகார்கள் முடிவுறுத்தப்பட்டிருந்தன.	நிறுவனத்திலுள்ள ஊழியர் பற்றாக்குறை மற்றும் புகார்கள் விசாரணை நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக ஏனைய கடமைகள் உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்படுகின்றமையினால் 2024.12.31 இல் 8572 புகார்கள் எஞ்சியிருந்தன என தெரிவிக்கப்பட்டுள்ளது.	புகார்கள் விரைவில் தீர்க்கப்படுவதற்கு புதிய முறைமையொன்று பின்பற்றப்படல் வேண்டும்.
(ii)	2024 ஆண்டினுள் 352 புகார்கள் சமரசம் செய்யப்பட்டுள்ளதுடன் 897 புகார்கள் விட்டுக்கொடுப்பின் அடிப்படையில் முடிவுறுத்தப்பட்டிருந்தன. ஆண்டினுள் 55 பரிந்துரைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் அப் புகார்கள் பெறப்பட்ட ஆண்டுகள் அடிப்படையில் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட காலமானது புகார்கள் பெறப்பட்ட ஒரு வருடத்தினுள் 11 உம், 02 ஆண்டுகள் மற்றும் 04 ஆண்டுகள் இடையே 22 புகார்களும், 06 ஆண்டுகள் மற்றும் 08 ஆண்டுகள் இடைப்பட்ட காலத்தில் 09 புகார்களும், 08 ஆண்டுகளுக்குள் 03 புகார்களும், 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஒரு புகாரும் ஆக காணப்பட்டன. மேலும் பரிந்துரை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த 55 புகார்களில் 05 பரிந்துரைகள்	1996 இன் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆனைக்குழு சட்டம் தொடர்பில் முதன்மையாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணி சமரசம் செய்வதாவதுடன், இறுதி பணியாக செய்யப்பட வேண்டியது விசாரணை மற்றும் பரிந்துரை பெற்றுக் கொடுப்பதாகும். ஆவ்வாறே புகார்கள் விசாரிக்கப்பட்ட பின்னர் அடிப்படை உரிமை மீறப்படாத சந்தர்ப்பங்களின் போது அவ்வாறான புகார்கள் தொடர்பில் பரிந்துரை பெற்றுக் கொடுக்கப்பட மாட்டாது. அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளமை தொடர்பில் சான்றுகள் அடிப்படையில் விடயங்கள் உறுதி செய்யப்பட்ட 55 புகார்களுக்காக மட்டும் பரிந்துரை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.	புகார்கள் விரைவில் தீர்க்கப்படுவதற்கு புதிய முறைமையொன்று பின்பற்றப்படுவது தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

	மட்டும் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் 02 புகார்கள் முறையீட்டாளர்களினால் அகற்றப்பட்டிருந்தன.		
(iii)	2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு இடையே காலத்தினுள் பெறப்பட்ட புகார்கள் விசாரிக்கப்பட்டு பெற்றுக் கொடுக்கப்பட்ட 68 பரிந்துரைகள் தொடர்பில் ஆனைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பின்னூட்டல் பரிசோதனை பிரகாரம் பரிந்துரை பெற்றுக் கொடுக்கப்பட்டு 20 ஆண்டுகளில் செயற்படுத்துவதற்கு அல்லது இணக்கம் பெற்றுக் கொள்வதற்கு முடியுமாயிருந்தது 12 பரிந்துரைகளுக்கு மட்டுமே. அது பின்னூட்டல் நடவடிக்கை எடுக்கப்பட்ட மொத்த பரிந்துரைகளில் 17 சதவீதமாகும். பரிந்துரைகள் செயற்படுத்தப்படாமை தொடர்பாக, சட்டத்தின் பிரகாரம் இறுதியான பணி சனாதிபதிக்கு அறிக்கையிடுவதாக இருப்பினும் 04 பரிந்துரைகளுக்காக மட்டும் சனாதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.	பரிந்துரைகள் செயற்படுத்துவதற்கு பிரதிவாதிகள் நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் பின்னூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனினும் ஆனைக்குழு அவ்வாறு பின்னூட்டல் நடவடிக்கைகள் மேற்கொண்டு பரிந்துரைகள் செயற்படுத்தாமை தொடர்பில் சனாதிபதிக்கு அறிக்கையிடல் சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது.	பரிந்துரைகள் செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.
(iv)	கணினி தரவுத் தளத்திற்கு தரவுகள் உள்ளடக்கப்பட்டிராமை மற்றும் தரவுத் தளம் ஒவ்வொரு நாளும் நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்படாமையின் காரணத்தினால் கணினி தரவுத் தளத்தின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் பெற்றுக் கொடுக்கப்பட்ட பரிந்துரைகள் 38 ஆக காணப்பட்ட போதிலும் பேணிச் செல்லப்பட்டிருந்த பதிவேடுகளின் பிரகாரம் அவ் எண்ணிக்கை 55 ஆகும்.	2024 ஆம் ஆண்டிற்குரிய புகார்கள் கோப்புகளுக்கு மேலதிகமாக தரவுத் தளம் நாளதுவரையாக்கப்பட்டு சீர் செய்யப்படும் எனவும் 2024 ஆம் ஆண்டில் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள 55 பரிந்துரைகளில் தரவுத் தளத்திற்கு 38 பரிந்துரைகள் மட்டும் உள்ளீடு செய்திருந்தது 17 கோப்புக்கள் தரவுதளத்திற்கு உள்ளடக்கப்படாமையை சீர் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.	கணினி அமைப்பு நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்படல் வேண்டும்.

(v)	2024 ஆம் ஆண்டிடினுள் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் உப அலுவலகங்களில் புகார்கள் தீர்வுக் காணல் பிரகாரம், பணியமர்த்தப்பட்ட உத்தியோகத்தர்கள் எண்ணிக்கை மற்றும் பெறப்படுகின்ற புகார்கள் எண்ணிக்கை பிரகாரம் மாதத்திற்கு 02 தொடக்கம் 16 வரையான வீச்சில் புகார்கள் பெறப்பட்டுள்ளதுடன் மாவட்ட அலுவலகங்களில் மீளாய்வாண்டு இறுதியில் 2351 புகார்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் புகார்கள் தீர்வு காணும் முறைமை மாவட்ட ரீதியில் பின்னூட்டல் செய்யப்பட்டு வினைத்திறன் அதிகரிக்கப்படல் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டுமென மேலதிகமாக அவதானிக்கப்பட்டது.	இது தொடர்பில் ஆனைக்குழுவின் கவனம் செலுத்தப்பட்டு எதிர்காலத்தில் ஆனையாளரொருவரின் தலைமைத்துவத்தில் பிரதான அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் குழுவொன்று பிரதேச அலுவலகங்களுக்கு சென்று புகார் கோப்புக்களை மேற்பார்வை செய்து அவை விரைவில் முடிவுறுத்தப்படுவதற்கு தேவையான ஆலோசனை பெற்றுக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது.	மாவட்ட அலுவலகங்களின் செயற்பாடுகள் முறையாக மேற்பார்வை செய்யப்படல் வேண்டும்.

4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2017 யூலை 28 திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவம் சுற்றறிக்கை பிரகாரம் சொத்துக்கள் CIGAS முறைமையின் ஊடாக கணக்கிடப்பட்டிருந்த போதிலும் அச் சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் இனங்காணப்படல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் போன்ற நடவடிக்கைகளின் போது இந்த வகையீட்டு குறியீடுகள் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமையின் காரணத்தினால் பொருள் சுற்றாய்வின் போது சொத்துக்கள் குறிப்பாக இனங்காணப்படவில்லை.	கடந்த ஆண்டுகள் தொடக்கம் வருடாந்த பொருள் சுற்றாய்வு மேற்கொள்ளப்பட்ட பிரகாரம் பழைய குறியீட்டு முறை மற்றும் பொருட்களின் வகைப்பாட்டின் பிரகாரம் இந்த ஆண்டிலும் பொருள் சுற்றாய்வு செய்யப்பட்டதுடன், எதிர்காலத்தில் புதிய குறியீட்டு முறையின் கீழ் சொத்துக்கள் குறியிடல் சிகாஸ் தொகைப்பின் குறியீடுகளின் கீழ் மேற்கொள்ளப்படுமென குறிப்பிடப்படுள்ளது.	குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(ஆ)	ஆனைக்குழுவினால் வாகன பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிராததுடன் 2024 ஆம் ஆண்டிற்குரிய 21 வாகனங்கள் ஓடப்பட்ட தூரம் தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	ஆனைக்குழுவிற்கு சொந்தமான வாகன பதிவேடு தற்போது தொலைந்துள்ளமையினால் மீண்டும் அந்த பதிவேடு முறையா மாதிரியில் தயாரித்து சமர்ப்பிக்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது.	வாகனங்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு தயாரிக்கப்படல் வேண்டும்.
(இ)	நி.பி 756(6) பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய இருப்பு பொருட்களின் சுற்றாய்வு நடவடிக்கைகள் 2025 மார்ச் 15 ஆந் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் யாழ்பாண அலுவலகத்தில் மட்டும் இருப்பு பொருட்களின் சுற்றாய்வு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருந்தது.	10 பிரதேச அலுவலகங்கள் மற்றும் 05 உப அலுவலகங்களைக் கொண்ட நிறுவனமொன்றினால் அவ் அலுவலகங்களின் இருப்பு பொருட்களின் சுற்றாய்வு விரைவாக செய்யப்பட்டு யூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கைகள் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஈ)	2023 ஆம் ஆண்டின் இருப்பு பொருட்களின் சுற்றாய்வின் பிரகாரம் 2025 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் பிரதான அலுவலகம் மற்றும் 05 உப அலுவலகங்களில் பொருள் கைதவிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை	இந்த ஆண்டில் அக் கைதவிர்ப்பு செய்யப்பட வேண்டிய பொருட்கள் வேறு நிறுவனமொன்றிற்கு பெற்றுக் கொடுப்பதற்கு அல்லது விற்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

5. நல்லாளுகை

5.1 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளரொருவர் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் 2023 நவம்பர் 01 ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதி வரையிலும்	ஆட்சேர்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையினால் உள்ளக கணக்காய்வாளரின் உதவிக்காக உத்தியோகத்தர்கள் நியமிப்பதற்கு தாமதமாகியுள்ளதுடன் இந்த ஆண்டினுள் முகாமைத்துவ உதவியாளர்கள் இணைக்கப்பட்ட பின்னர் எதிர்காலத்தில் உள்ளக	தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

எந்தவொரு கணக்காய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு பிரிவின் நடவடிக்கைகள் வினைத்திறனாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	

5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41 ஆம் பிரிவின் கீழ் அனைத்து நிறுவககத்தினாலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடத்தப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 திசெம்பர் 31 வரையில் ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் மட்டும் நடத்தப்பட்டிருந்தது.	உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்ட பின்னர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடத்துதலானது உரிய முறையில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது.	தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

6. மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 221 ஆக காணப்பட்ட போதிலும் உள்ளவாரான பதவியணி 160 ஆக காணப்பட்டமையினால் 61 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. அவ் வெற்றிடங்களில் 05 பதவிகள் கடமை நிறைவேற்றல் அடிப்படையிலும், 14 பதவிகள் ஒப்பந்த அடிப்படையிலும் ஒரு பதவி நாளாந்த அடிப்படையிலும் நிரப்பபட்டிருந்தன.	ஒரு உத்தியோகத்தர் உயர் நீதி மன்றத்தில் வழக்கொன்றினை தாக்கல் செய்திருத்தல், வெற்றிடங்கள் நிரப்பப்படல் அரசாங்கத்தினால் இடைநிறுத்தப்படல் மற்றும் விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் குறித்த தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிராமையின் காரணத்தினால் ஆட்சேர்க்கப்பட முடியவில்லை. ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்காக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்குமாறு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.	அத்தியாவசிய பதவிகளின் வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.